நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருப்பூர் மாவட்டம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, தொட்டிபாளையம் கிராமம் க.ச.எண்கள்-170/5B1.170/5B2.170/5B3.171/2B1.171/2B2.171/2B3. 172/2 E2A1. 172/2 E2A2.172/2 E2A4-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400 (1 செமீ = 4 மீ)

இணையதள விண்ணப்ப எண் : YK9KSIJH நாள்: 09.03.2025

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 2.036 ஏக்கர் (அ) 8240.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 42

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை

உத்தேச மனைப்பிரிவு சாலை

வ

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I. மனைப்பிரிவின் சாலை மற்றும் மூலை முடுக்குகளின் பரப்பளவு : 2422.65 ச.மீ

II. பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (8240.00 - 2422.65) X (10/100) = 581.73சமீ (10.00%)

ii) ஒப்படைக்கப்பட்ட வேண்டிய பூங்கா பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை ரூ.4421224/- நாள்: 28.07.2025 -ல் மனுதாரரால் அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

III) பொது உபயோகம் (உள்ளாட்சி மற்றும் TANGEDCOக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

A) உள்ளாட்சி பொது உபயோகம்-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (8240 - 2422.65) X (0.5/100) = 29.09 ச.மீ
ஒதுக்கப்பட்ட பரப்பு : 31.00 ச.மீ (1.06%)

B) உள்ளாட்சி TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (8240 - 2422.65) X (0.5/100) = 29.09 ச.மீ
ஒதுக்கப்பட்ட பரப்பு : 31.00 ச.மீ (1.06%)

கட்டிட வரம்பு :- 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்.
9.0மீ மேல் 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்.


மூலை முடுக்கு :- 12.0மீ வரையிலான அகல சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.50மீ அகல சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண்:18 ந.நி(ம)சு.வதுறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 ந.நி(ம)சு.வதுறை நாள்.31.01.2020 -ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோக ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் TANGEDCO-க்கான பொது உபயோக ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியவரும்பட்சத்தில் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைசெய்யும் மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தருதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO:75/2025
PLANNING PERMISSION NO :75/2025

உதவி இயக்குநர்
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர் மாவட்டம்



திருப்பூர் மாநகராட்சி

மனைப்பிரிவு / மனைஉட்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது

தெ.மூ.54/மனு/4063/2025/02 நாள்-02.02.2026

அலுவலக உத்தரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு / மனை உட்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
திருப்பூர் மாநகராட்சி

Signature valid
ஜெ.ஜெயராணி
சர்வேயர் / உதவி வரைவாளர்

2.2.26

ந.விஜயகுமார்
மேற்பார்வையாளர்